உ
குகமயம்




# வென்றி மாலை

05.10.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# சக்கர சுவாசக் காற்று அணுகாதிருக்க

உலகுக்கு உபதேசம்

கோழிக் கொடிய னடி பணியாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோ
யூழிற் பெருவலி யுண்ண வொட்டா துங்க ளத்த மெல்லாம்
ஆழப் புதைத்து வைத் தால்வருமோநும் மடிப்பிறகே
-கந்தலரங்காரம்-

இந்தச் சிறிய பிரதி எனது மனதில் எழுந்த எண்ணத்தால் தேடிய போது கிடைத்தது இதனைப்படித்து எல்லோரும் பயன் பெறவேண்டுகிறேன்

என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய எனது பெற்றோரின் ஞாபகமாக இதனை அச்சேற்றியுள்ளேன்.

எல்லோரும் எல்லாம் வல்ல செந்தூர்ப் பெருமானின் பெருங்கருணையை பெற்று உடல், உள ஆரோக்கியமாக வாழ அவனைப் பிரார்த்திக்கின்றேன்.

செந்தூரில் வாழும் கந்தனை நினைத்தால் தீராத வினையாவும் தீரும் அம்மா என்ற பாடல் வரிகள் என்னை ஆட்கொள்ள "வென்றி மாலை" யை உங்கள் கரங்களில் தவள விடுகின்றேன்.

## கந்தன் பெருமை - கருணை

நாளென் செயும் வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும் ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுஞ் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்கு முன்னே வந்து தோன்றிடினே
-கந்தலரங்காரம்-

நன்றி

பண்ணாகம்,
சுழிபுரம்.

வெ.அன்பழகன்

தி. செல்வமனோகரன்
141, கேணியடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றிமாலைக் கவிராயர்

## "வென்றிமாலைக் கவிஞர் அடியார்க்கும் அடியேன்"

வென்றிமாலையர் அந்தணர், இவர் திருச்செந்தூர்த் திருக் கோயிலில் மடைப்பள்ளிவேலை செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் நைவேத்தியம் காலதாமதப்பட கோயில் அதிகாரிகள் இவரைத் தண்டித்தார்கள். இவர் மானமிழந்து வாழ்தலினும் கடலில் வீழ்ந்திறத்தல் நன்றெனத் துணிந்தபோது, முருகபிரான் ஓர் அன்பர் போலத் தோன்றி "அன்ப! நீ செந்தூர்த் தலத்தின் மான்மியத்தைத் தமிழிற் பாடுவாயாக - வடமொழி மூலம் செவ்வல் என்னும் ஊரில் கிருஷ்ண சாஸ்திரியிடம் இருக்கின்றது. அதை அவர் தமிழில் மொழிபெயர்த்துத் தருவார். அதைப் பாடலாகப் பாட உனக்கு வாக்குவரும்" எனக் கூறி மறைந்தார். அங்ஙனமே இவர் சாஸ்திரியாரைக் கண்டு அவர் மொழிபெயர்த்துத் தந்த தமிழ் மான்மியத்தைப் பாடலாகப் பாடத் திடீரென்று இவருக்குத் தடைபடாத வாக்குப் பிறந்தது. முருகன் திருவருளால் திருச்செந்தூர்ப் புராணத்தைப் பாடி முடித்தனர். அவர் அதை அரங்கேற்ற முயன்ற போது, திருச்செந்தூர்த் திரிசுதந்தரர்களாகிய (முக்காணிய) பிராமணர்கள் இவரை அசட்டை செய்து இகழ்ந்தார்கள். இவர் மனம் நொந்து புராண ஏட்டைக் கடலிலே வீசி எறிந்து சிவயோகபரராய்க் கந்தக்கடவுளின் திருவடியை அடைந்தனர். அப்புராண ஏடு அலைகளால் ஒதுக்கப்பட்டு ஈழ தேசத்தில் யாழ்ப்பாணத்துக்கருகே ஒருவரிடம் கிடைத்தது. அவர் இருந்த தெருவில் மாத்திரம் சக்கரசுவாசம் என்னும் விஷக்காற்று வராதிருப்பதை அறிந்த அந்த ஊரார் வியப்புற்றபோது, முருகவேள் "இன்னாரிடத்தில் எமது புராணம் உளது. அதன் பெருமையால் அந்தத் தெருவில் மாத்திரம் அந்நோய் பரவவில்லை" என்று ஊராருக்குக் கனவில் தெரிவித்தனர். அவர்கள் அந்நூலைப் பெற்று வீடுகள் தோறும் அதை நேசித்துப் பூசித்து வாசிக்க, ஊர் க்ஷேமம் அடைந்தது என்பர்.

இவ் வரலாற்றைத் திருச்செந்தூர்ப் புராணத்துப் பாயிரத்திலும், சுப்பிரமணிய பராக்ரமத்தில் 'புராணபாலன கிருபாமூர்த்தி' என்னும் தலைப்பிலும் காணலாம். புராணம் கிடைத்த இடத்துக்குப் 'பனைமுனை', 'புராணமுனை' எனப் பேர் போந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விரி தருசீர்ப் புகழ்ச்செவ்வற் கிருட்டிண சாஸ் திரியெனு நால்
வேதன் வேதங்
கருதரிய வடகலையை ஆராய்ந்து சொலஅதனைக்
கருதிச் செவ்வேள்
சரிதையென உணர்ந்துணராப் புல்லறிவி னாலினிய
தமிழே போலத்
தெரிதரத்தென் செயந்திபுர மான்மியமாம் எனஉலகிற்
செப்பி னேனால்"

(திருச்செந்தூர்ப் புராணம் - பதிகம் 15)

"மயில்வாழி தகர்வாழி சேவல் வாழி
மநுஅனைய திரிசுதந் தரத்தர் வாழி
குயில்வாழு மொழித்தெய்வ யானை வாழி
குறவர்குலக் கொடிவாழி, கொடுஞ்சூர் மாய்த்த
அயில்வாழி செயந்திபுரத் துற்றோர் வாழி
ஆறுமுகப் பெருமான்தன் கருணை வாழி
பயில்வான்மை முகில்வாழி புராணம் கேட்போர்
படிப்போர்கள் கிளைகளெல்லாம் வாழி மாதோ"

திருச்செந்தூர்ப் புராணம்-ஈற்றுப் பாடல்)

## பதிகம்

நயிமிசா ரணியவனஞ் சூதமுனி சென்றதுவு நவையில் சூத
னியல்பினான் முனிவர்முகம் பார்த்துயர்வி யாசமுனி யினிமை சார்ந்த
வுயர்வினா லருஞ்சுகற்குள் ளன்பொழுகக் கங்கைநதி யோங்கு மூலத்
தயர்வுறா திருந்தருள்செய் சிந்துபுர வளமனைத்து மடைவிற் சூழா.

**இதன் பொருள்:** நயிமிசாரணிய வனஞ் சூதமுனி சென்றதுவும் - நைமிசாரணியம் என்னுந் தபோவனத்தின்கண்ணே சூதமுனிவன் சென்றமையையும், நவையில் சூதன் இயல்பினால் முனிவர் முகம் பார்த்து - குற்றமற்ற அச்சூதமுனிவன் (தன்னை அன்போடு உபசரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டு வேண்டிக்கொண்ட) இயல்பு நிறைந்த அம்முனிவர்களுடைய முகங்களைப் பார்த்து, வியாசமுனி இனிமை சார்ந்த உயர்வினால் அருஞ்சுகற்கு உள்ளன்பொழுக ஓங்கு கங்கை நதி மூலத்து அயர்வுறா திருந்து அருள் செய் சிந்து புரவள மனைத்தும் அடைவிற் சூழா- (முற்காலத்து) வியாச முனிவன் (தனக்கு) இனிய வழிபாடு செய்தலைப் பொருந்திய உயர்வுடைய அருமையான சுகமுனிவனுக்கு மனத்தில் அன்பு பெருக உயர்ந்த கங்கையாற்றின் அடியிலே தளராமலிருந்து போதித்தருளிய செயந்திபுரத்தின் சிறப்புக்களையெல்லாங் கிரமமாக ஆலோசித்து எ-று.

ஆல் இரண்டனுள் முன்னையது வினைத்தொகை. பின்னையது சாரியை. ஆலுதல்- நிறைதல். இங்கே ஐயுருபு தொகநின்ற "சென்றதுவும்" என்பதும் பின் 13ஞ் செய்யுளீற்றில் அவ்வாறு நின்ற "விளம்புமாறும்" என்பதும் 14ஞ் செய்யுளில் "ஆராய்ந்து சொல" என்பதனை முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளுதலும், இங்கே சூதன் பார்த்து சூழா என்பனவும் 2ஞ் செய்யுள் முதலிய 12 செய்யுட்களிலும் ஐயுருபு தொக உம்மை பெற்று "மொழிந்தவாறும்" என்பது முதல் "செய்திட்டமையும்" என்பது வரையாய் வருவன பலவும் ஷெ "விளம்புமாறும்" என்பதனையே முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளுதலும் நுண்ணுணர்வாற் கண்டுகொள்க. (1)

**முறையினாற் சுகமுனிக்கு வியாசமுனி யுபதேச மொழிந்த வாறும்**
**மறையுலாஞ் செயந்திபுர வைபவமுன் சொற்றதுவும் வைவேற் கந்தன்**
**பிறையுலாஞ் சடைக்கடவுள் கவுரியுடன் றோய்ந்தபெரும் போகந் தன்னி**
**னிறைவினா லவதரித்துக் கடவுளர்தம் முகநோக்கி நிகரி லாத-**

**இதன் பொருள்:** வியாசமுனி சுகமுனிக்கு முறையினால் உபதேசம் மொழிந்தவாறும் - வியாசமுனிவன் சுகமுனிவனுக்கு (த் தான் பின் சொல்லுங் கதை முதலியனவற்றை யெல்லாந் தொகுத்துணர்த்து) செயந்திபுர வைபவம் முன் சொற்றதுவும் - சுருதிகளிற் பரந்த செயந்திபுரத்தின் மாகான்மியத்தை முன்பு கூறியதனையும், பிறை உலாஞ் சடைக் கடவுள் கவுரியுடன் தோய்ந்த பெரும் போகந்தன்னில் வைவேற்கந்தன் நிறைவினால் அவதரித்து - இளம்பிறை தவழ்ந்த சடையினையுடைய சிவபெருமான் உமாதேவியாரோடு சேர்ந்து நிகழ்த்திய பேரின்பத் திருவிளையாடலின்கண் கூரிய வேலையுடைய முருகபிரான் (சுத்த சாட்குண்ணிய) நிறைவினோடு வெளிப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளர் தம்முகம் நோக்கி - (வள்ளியம்மை திருமணமுஞ் சூரசங்காரமுந் தெய்வயானை திருமணமுஞ் செய்த பின்னர் தம்மை வழிபட்டு நின்ற) தேவர்களுடைய முகங்களைப் பார்த்து எ-று.
நிகரிலாத என்பது வருஞ் செய்யுளிற் சேர்த்துரைக்கப்படும். (2)

**பாரதகண் டத்தினிடை மலைவளனு நதிச்சிறப்பும் பரம்புந் தெண்ணீர்**
**வாரிதியின் பெருவளனும் பெற்றநக ரொன்றுநம்முன் வகுப்பீ ரென்ன**
**வாரருளி னிறைகேட்ட வந்நகர முன்னரெமக் கலக்க ணீந்த**
**சூரனுயிர் குடித்தருளா லிருந்தசிந்து புரமெனமுன் சொற்ற வாறும்.**

**இதன் பொருள்:** நிகரிலாத பாரதகண்டத்தினிடை மலைவளனும் நதிச்சிறப்பும் பரம்புந் தெண்ணீர் வாரிதியின் பெருவளனும் பெற்ற நகர் ஒன்று நம்முன் வகுப்பீர் என்ன - ஒப்பில்லாத பாரதகண்டத்தின் கண்ணே மலைச் சிறப்பும் யாற்றுச்சிறப்பும் பரந்த தெளிந்த நீரையுடைய கடலின் பெருஞ் சிறப்பும் ஒருங்கமையப்பெற்ற நகரம் ஒன்றை (நாம் வசித்தற் பொருட்டு) நங் கருத்திற்கியையச் சொல்லுங் கள் என்று கேட்ப, ஆர் அருளின் இறை கேட்ட அந்நகரம் - (அது கேட்ட தேவர்கள் அவரை நோக்கி) நிறைந்த கருணையினாலே எம்பெருமானே நீர் கேட்ட அவ்வியல்புடைய நகரமாவது, முன்னர் எமக்கு அலக்கண் ஈந்த சூரன் உயிர் குடித்து அருளால் இருந்த சிந்துபுரம் என முன் சொற்றவாறும் - முன்னாளில் எங்களுக்குத் துன்பந்தந்த சூரனைச் சங்கரித்து அருளோடு வீற்றிருந்த செயந்திபுரமே என்று (அவர்) கருத்தின்படி கூறியவாற்றினையும் எ-று.
முன் - முதனிலைத் தொழிற்பெயர். (3)

**தண்ணளியிற் குமரேசன் செயந்திபுரம் போந்துலகந் தழைக்க மாயோன்**
**கண்ணிடத்துத் தோன்றுமிரு கன்னியர்பா லினிதிருக்குங் காலை யானைப்**
**பெண்ணமுதை மானளிக்கும் பேதையிகழ்ந் திருந்த தனைப் பிரானுள் ளோர்ந்து**
**மண்ணளந் துண்டுடன் காத்த மாத வன்றன் வலக்கணவ தரித்து வந்தாள்.**

**தன்னையெதி குறவழைத்து நீயிடப்பா லிருக்குமருந் தாரமான**
**வின்னையவ மதித்திருந்த செய்கையினாற் கொடுஞ்சாப மேற்கொண்டோர்மான்**
**மன்னுதரத் துற்பவித்து வேடரிடத் திருத்தியவண் மறையின் வாய்ப்ப**
**வுன்னையழல் சான்றாக யாம்வதுவை யாற்றுவமென் றுரைத்த வாறும்.**

**இதன் பொருள்:** குமரேசன் தண்ணளியிற் செயந்திபுரம் போந்து - குமாரசுவாமியார் கருணையினாலே செயந்திபுரத்தின்கட் சென்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகந் தழைக்க மாயோன் கண்ணிடத்துத் தோன்றும் இரு கன்னியர் பால் இனிதிருக்குங்காலை - உலகம் இல்லறத்தினின்றுய்யும் பொருட்டு விட்டுணுவினுடைய கண்களிலே தோன்றிய இரண்டு தேவிமாரது உரிமையோடு இனிது வாழுங் காலத்திலே, யானைப் பெண்ணமுதை மான் அளிக்கும் பேதை இகழ்ந்து இருந்ததனைப் பிரான் உள் ஓர்ந்து - (குணத்தால்) அமிர்தம் போன்ற தெய்வயானை யம்மையாரை (ப்பின்) மானாற் பெறப்படும் பெண்ணாகிய வள்ளியம் மையார் அவமதித்திருந்தமையை முருகபிரான் திருவுளத்தில் அறிந்து, மண்ணளந்து உண்டு உடன் காத்த மாதவன்றன் வலக்கண் அவதரித்து வந்தாள் தன்னை எதிருற அழைத்து - பூமியையளந்தும் உண்டும் அவ்வப்பொழுதே (தீங்கு வாராவண்ணம்) காத்துக்கொண்ட விட்டுணுவினது வலக்கண்ணிற்றோன்றிய வள்ளியம்மையாரைத் தம்மெதிரே வருவித்து, நீ இடப்பாலிருக்கும் அருந்தாரமான மின்னை அவமதித்திருந்த செய்கையினால் - பெண்ணே நீ நமது இடப்பக்கத்தே கிரமத்தோடிருக்கும் அரிய மனைவியாகிய பெண்ணை இகழ்ந்திருந்த செய்கையினாலே, கொடுஞ் சாபம் மேற்கொண்டு ஓர் மான்மன் உதரத்து உற்பவித்து வேடரித்து இருத்தி -(நாமிடுகின்ற)கொடிய சாபத்தை பெற்றுக்கொண்டு ஒரு மானினது பெருமையாகிய வயிற்றின் கட் பிறந்து வேடரிடத்து வளர்ந்திருப்பாய், அவண் மறையின் வாய்ப்ப உன்னை அழல் சான்றாக யாம் வதுவை ஆற்றுவமென்று உரைத்தவாறும் - அங்கே வேதவிதிப்படி சிறப்ப உன்னை அக்கினி சாட்சியாக யாம் விவாகஞ் செய்வோம் என்று கூறியவாற்றையும் எ-று.

(4-5)

உரைத்தகொடு மொழிதாங்கி மானிடத்திற் பிறந்தெயின ரொருவா விந்தை
வரைப்புனத்தி லிருந்துதினை காத்ததுவு மம்மலையில் வயங் குங் கூர்வேற்
கரத்திறைவன் கண்டதுவும் வேடன் முனம் போயுனது கன்னி தன்பால்
விரைத்தொடையல் யான்சூட்ட வேண்டுமெனக் கருணையுடன் விளம்பு மாறும்.

**இதன் பொருள்:** உரைத்த கொடு மொழி தாங்கி மானிடத்திற் பிறந்து எயினர் ஒருவா விந்தை வரைப் புனத்தில் இருந்து தினை காத்ததுவும் - (அங்ஙனங்) கூறிய சாபத்தை ஏற்று (வள்ளியம்மையார்) மான் வயிற்றிற் பிறந்து வேடர் நீங்காத விந்தைமலையிற் புனத்தின்கண் இருந்து தினை காத்தமையையும், அம்மலையில் வயங்குங் கூர் வேற்கரத்து இறைவன் கண்டதுவும் - அவ்விந்தை மலையிலே விளங்குகின்ற கூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதத்தைத் தரித்த திருக்கரத்தையுடைய முருகக்கடவுள் (சென்று அவ்வள்ளியம்மையாரைக்) கண்டமையையும், வேடன் முனம் போய் யான் உனது கன்னி தன்பால் விரைத்தொடையல் சூட்ட வேண்டு மெனக் கருணையுடன் விளம்புமாறும் - (அங்ஙனங் கண்டபின் அவரை வளர்த்த) வேடராசன் முன்னே போய் யாம் உன் மகளிடத்தே நறுமணம் பொருந்திய மணமாலையைச் சூட்ட வேண்டும் என்று அருளோடு கூறியவாற்றையும் எ-று. (6)

> கானவருக் கரசனவ னுடன்படா திருந்ததுவுங் கன்னி முன்போய்
> வானளவுந் தருவாகி நின்றதுவுங் கானவர்கோன் மலைப்பா லன்பிற்
> போனதுவு மித்தருநம் புனத்தினிடை வரலாறு புதுமைத் தாகு
> மானதருக் குறைமினெனச் சொற்றதுவுஞ் சொற்றது கேட்டைய னாங்கே.

**இதன் பொருள்:** கானவருக் கரசன் அவன் உடன்படா திருந்ததுவும் - வேடர்க்கரசனாகிய அவன் (அதற்குச்) சம்மதியா திருந்தமையையும், கன்னிமுன் போய் வான் அளவுந் தருவாகி நின்றதுவும் - (அது கண்ட கடவுள்) வள்ளியம்மையாரின் எதிரே சென்று ஆகாயத்தை அளவுகின்ற மரவடிவமாய் நின்றமையையும், கானவர்கோன் மலைப்பால் அன்பிற் போனதுவும் - (பின்பு) வேடராசன் அம்மலையின் கண் (மகளைக் காணும்) அன்பினாற் சென்றமையையும், இத்தரு நம் புனத்திடை வரலாறு புதுமைத்தாகும் ஆன தருக்குறைமின் எனச் சொற்றதுவும் - (அங்ஙனம் மரத்தைக் கண்ட அரசன்) "இம்மரம் நமது புனத்தின்கண் வந்த வகை அதிசயத்ததாகும்; இங்ஙனமாய மரத்தைத் தறிமின்" என்று (தன்கீழ் வேடருக்குக் கூறினமையையும், சொற்றது கேட்டு ஐயன் ஆங்கே - (அவன் அவ்வாறு) கூறியதனைக் கேட்டுக் கடவுள் அவ்விடத் திலே எ-று. (7)

> தாருவுருக் கரந்துதுணைக் குஞ்சரத்தி னிருசரணந் தாழ நோக்கி
> வாரணத்தி னுருவாகி மாதினிடஞ் சென்றதுவு மாது சோர்ந்து
> வேரிமலர்க் கடம்பணியு மார்பிறுகப் புல்லியதும் விருப்பாய் வேடன்
> சீரருளிற் கன்னிகையை யுனக்களிப்ப னென்றுரைத்துச் சென்ற வாறும்.

**இதன் பொருள்:** தாருவுருக் கரந்து துணைக் குஞ்சரத்தின் இரு சரணந் தாழ - மரவடிவம் மறைந்து (அகன்று பின்னொருநாளிலே தம் மூத்த) சகோதரராகிய யானைமுகக் கடவுளினுடைய உபயபாதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிய, நோக்கி வாரணத்தி னுருவாகி மாதினிடஞ் சென்றதுவும் - (அக்கடவுள் இக்கடவுளினது குறிப்பை) உணர்ந்து யானை வடிவமாய் வள்ளியம்மையாரிடஞ் சென்றமையையும், மாது சோர்ந்து வேரிக் கடம்புமலர் அணியும் மார்பு இறுகப் புல்லியதும் - (யானையைக் கண்டு அஞ்சிய) அம்மையார் மனந்தளர்ந்து நறுமணமுடைய கடப்பம் பூ மாலையை அணிந்த (கடவுளினது) திருமார்பை இறுகத் தழுவினமை யையும், வேடன் சீரருளின் விருப்பாய்க் கன்னிகையை உனக்கு அளிப்பன் என்றுரைத்துச் சென்றவாறும் - (அங்ஙனம் நிகழ்ந்ததை யுணர்ந்து வந்த) வேடன் திருவருளினாலே (கடவுளை யுணர்ந்து வணங்கி) விருப்பமுடையனாய் "மகளை உமக்குத் தருவேன்" என்று கூறி (அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு) சென்றபடி யினையும் எ-று. (8)

**குறவரிறை யவன்மனைபோய்க் குமரேசன் சுரர்முனிவர் குழுமிப் போற்றப்**
**பிறைநுதலை மறைமுறையிற் பேரருளி னொருவேட்டுப் பெட்பினாலே**
**நறுவமலர்த் தேரேறி யுயர்செயந்தி நகரடைந்து நவையிலாத**
**பொறைபடைத்த யானைமக ளெதிர்போந்து பொருந்தவவ னிருந்தவாறும்.**

**இதன் பொருள்:** குமரேசன் குறவரிறைவன் மனை போய் - குமார சுவாமியார் வேடராசனது வீட்டிற் சென்று, சுரர் முனிவர் குழுமிப் போற்ற - தேவரும் முனிவருங் கூடித் துதிக்க, பிறைநுதலை மறை முறையிற் பேரருளினொடு வேட்டு - வள்ளியம்மையாரை வேதவிதி யாற் பெருங் கருணையினோடு வரைந்து, பெட்பினாலே நறவமலர்த் தேரேறி உயர் செயந்தி நகர் அடைந்து - அன்பினோடு தேன் பொருந்திய புஷ்பங்களாலாய விமானத்தில் ஏறி உயர்ந்த செயந்தி நகரத்தைச் சேர்ந்து, நவையிலாத பொறை படைத்த யானைமகள் எதிர்போந்து பொருந்த அவண் இருந்தவாறும் - குற்றமற்ற பொறுமை யைப் பெற்ற தெய்வயானையார் எதிர்கொண்டு வந்து கூட அங்ஙனம் இருந்தபடியினையும் எ-று. (9)

**பொருந்தியவர்க் குமரேச னிருந்துழிநான் முகம்படைத்த புத்தேள் போற்றி**
**வரந்தனைப்பெற் றிட்டமையுந் திரிசுவதந்தி ரத்தரெனு மறைவல் லோரா**
**மருந்தவத்தர் வரலாறும் பன்னிருமாதப் பூசை விதிவழாது**
**திருந்துறச்செய் பயனினொடு குமரவிபூதிச் செயலைத் தெரித்தவாறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதன் பொருள்:** குமரேசன் அவரப் பொருந்தி இருந்துழி - குமார பெருமான் (வள்ளியம்மையுந் தெய்வானையுமாகிய) அவர்களோடு புணர்ந்து அமர்ந்தபொழுது, நான்முகம் படைத்த புத்தேள் போற்றி வரந்தனைப் பெற்றிட்டமையும் - நான்கு முகங்களைக் கொண்ட பிரமன் (அவரை) வழிபட்டு வரத்தைப் பெற்றுக்கொண்ட பெற்றியை யும், திரிசுவதந்திரத்தர் எனும் மறைவல்லோராம் அருந்தவத்தர் வரலாறும் - திருசுதந்திரர் என்று சொல்லப்படும் வேதங்களின் வல்ல ராகிய அரிய தவத்தார்களது வரலாற்றினையும், பன்னிருமாதப் பூசை விதிவழாது திருந்துறச் செய் பயனினொடு குமர விபூதிச் செயலைத் தெரித்தவாறும் - (குமாரசுவாமியாருக்குப்) பன்னிரண்டு மாதங்களிலும் (சுட்டப்படுங் காலங்களில் விசேஷ) பூசையை விதி தவறாவண்ணந் திருத்தமாகச் செய்தலால் வரும் பயனையுங் குமார விபூதியின் வரலாற்றையும் உணர்த்தியபடியினையும் எ-று.

விபூதி - திவ்விய ஐசுவரியம். (10)

**வயம்புனையும் வேள்வீர வாகுவுக்குத் திருக்கோல வாய்ப்புக் காட்டி**
**நயம்பெறவாங் குதித்ததுவு மச்செயலை நாரதன்போய் நறைத்துழாய்சூழ்**
**புயஞ்சிறந்தாற் குரைத்ததுவு முரைத்தமுனி புலந்தேறப் புயல்போன் மேனி**
**சுயம்பிரகா சக்கடவுள் குமரேசன் சீரனைத்துஞ் சொற்ற வாறும்.**

**இதன் பொருள்:** ஆங்கு வயம் புனையும் வேள் விரவாகுவுக்குத் திருக்கோல வாய்ப்பு நயம்பெறக் காட்டி உதித்ததுவும் - அச்செயந்தி புரத்திலே வெற்றிசிறந்த சுப்பிரமணியப் பெருமான் வீரவாகுவுக்கு விசுவரூபச் சிறப்பை நன்மைபொருந்தக் காட்டி வெளிப்பட்டமையை யும், அச்செயலை நாரதன் போய் நறைத்துழாய் சூழ் புயஞ் சிறந்தாற்கு உரைத்ததுவும் - அச்செய்கையை நாரதமுனிவன் (கண்டு வைகுண்டத் துச்) சென்று நறுமணமுடைய துளசி மாலையை அணிந்த புருடோத்தம (னாகிய நாராயண) னுக்குச் சொன்ன தன்மையையும், உரைத்தமுனி புலந்தேறப் புயன்போன் மேனி - (அங்ஙனம் பேரதிசயத்தோடு) சொன்ன முனிவன் (இனிதுணர்ந்து) மனந் தெளியும் வண்ணம் முகில் போலும் மேனியையுடைய (அந்நாராயண)ன், சுயம்பிரகாசக் கடவுள் குமரேசன் சீரனைத்துஞ் சொற்றவாறும் - (பிறருதவி வேண்டாது) தாமே பிரகாசிக்கு மியல்புள்ள கடவுளாகிய குமாரசுவாமியினுடைய பெருந் தகைமைகளையெல்லாங் கூறியபடியினையும் எ-று. (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திரனோ டன்னவனைத் தாங்கயிரா வதயானை யெய்து சாப**
**மந்தமுறைச் செய்தமையே யாதிபல சரிதங்க ளறைந்த வாறுஞ்**
**சிந்துபுரச் சிறப்பதனை விதிமுறையா ராய்ந்தயிற்கைச் செவ்வே ளன்பாய்**
**வந்தநம னுளந்தேறக் கருணையுட னாங்கவர்க்கு வகுத்தவாறும்.**

**இதன் பொருள்:** இந்திரனோடு அன்னவனைத் தாங்கு அயிராவத யானை எய்து சாபம் - இந்திரனும் அவனைத் தாங்கிய ஐராவதயானை யும் (துருவாச முனிவனாற்) பெற்ற சாபத்தை, அந்தமுறச் செய்தமையே ஆதி பல சரிதங்கள் அறைந்தவாறும் - அழியச் செய்தமை முதலிய பல கதைகளைக் கூறியவாற்றினையும், அயிற் கைச் செவ்வேள் - வேலாயுதத்தைக் கையிற்கொண்ட முருகபிரான், அன்பாய் வந்த நமன் சிந்துபுரச் சிறப்பதனை விதிமுறை ஆராய்ந்து உளந்தேற - (தம்பாற்) பத்தியோடு வந்த இயமன் செயந்திபுரத்தின் விசேஷத்தை விதிப்படி ஆராய்ந்து மனந் தெளியுமாறு, கருணையுடன் ஆங்கவற்கு வகுத்தவாறும் - பேரருளோடு அவனுக்குத் திருவாய் மலர்ந்தருளிய திறத்தினையும் எ-று. (12)

**கடவுளர்கள் யாவருக்கு மெண்ணிறந்த முனிவரர்க்குங் கமலப் புத்தே**
**ளுடனிருந்து செயந்திபுரச் செய்கைதனை யுரைத்ததுவு முடற்று மாயைத்**
**தொடரகற்றுஞ் சுகமுனிவன் சிந்துபுரந் தனிற்போந்து சுடர்வேற் செங்கை**
**விடலைதுணைத் தாள்போற்றி யருச்சனை செய் திட்டமையும் விளம்புமாறும்.**

**இதன் பொருள்:** கமலப் புத்தேள் கடவுளர்கள் யாவருக்கும் எண்ணிறந்த முனிவர்க்கும் - தாமரை மலரில் இருக்கும் பிரமதேவன் (இந்திராதி) தேவர் யாவருக்கும் அளவிறந்த முனிச்சிரேட்டர்கட்கும், செயந்திபுரச் செய்கைதனை உரைத்ததுவும் - செயந்திபுரத்தின் (மான்மியச்) செயல்களைக் கூறினமையையும், உடனிருந்து உடற்றும் மாயைத் தொடர் அகற்றுஞ் சுகமுனிவன் - கூடியிருந்து கேடு செய்கின்ற மாயாமலங்களைக் களையவேண்டிய சுகமுனிவன், சிந்துபுரந்தனிற் போந்து - (மேற்காட்டியபடி வியாதமுனி உபதேசித்தவற்றையெல்லாங் கேட்ட அக்கணத்திற்றானே பெருங்காதலோடு புறப்பட்டுச்) செயந்தி புரத்திற் சென்று, சுடர்வேற் செங்கைவிடலை துணைத்தாள் போற்றி அருச்சனை செய்திட்டமையும் - ஒளியார்ந்த வேலைச் சேர்ந்த செம்மையாகிய திருக்கரத்தையுடைய கடவுளினது உபயபாதங்களை யுந் துதித்துப் பூசை செய்தமையையும், விளம்புமாறும் - (நைமிசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணியவாசிகளாய (முனிவர்களுக்குச்) சொல்லி முடித்தமையையும் எ-று. (13)

**விரிதருசீர்ப் புகழ்ச்செவ்வற் கிருஷ்ணசாத் திரியெனுநால் வேதன் வேதங்**
**கருதரியவடகடலை யாராய்ந்து சொலவதனைக் கருதிச் செவ்வேள்**
**சரிதையென வுணர்ந்துணராப் புல்லறிவினானினிய தமிழே போலத்**
**தெரிதரத்தென் செயந்திபுர மான்மியமா மெனவுலகிற் செப்பினேனால்.**

**இதன் பொருள்:** விரிதருசீர்ப் புகழ்ச்செவ்வற் கிருஷ்ணசாத்திரி எனும் நால்வேதன் - பரந்த வளங்களாற் பொருந்திய புகழையுடைய திருச்செவ்வலூரில் உள்ள கிருஷ்ணசாஸ்திரி என்னும் பெயரிய சதுர்வேதபாரக (னாகிய பூசுரபண்டித)ன், வேதங் கருது அரிய வடகடலை ஆராய்ந்து சொல - வேதப்பொருளை (உபவிருங்கணமாய் நின்று) கருதுவிக்கின்ற அரிய கடல்போலுஞ் சம்ஸ்கிருத செயந்தி மான்மியத்தை ஆராய்ந்து (இனிது விளங்கத் தமிழின்) மொழிபெயர்த்துச் சொல்ல, அதனைக் கருதிக் கருதி - அ(ங்ஙனங் கூறிய) தனை உளத்தில் அமைத்து, உணராப் புல்லறிவின் நான் - (பிரபந்தஞ் செய்தற்கு இன்றியமையாது வேண்டப்படுங் கருவி நூல்களை ஐயந்திரிபற உணராத புல்லறிவினையுடையேனாய (வென்றிமாலை என்னும் பெயரிய) நான், செவ்வேள் சரிதையென உணர்ந்து - (இது தன்னை உளங்கொள்வார்க்குப் பேருறுதி பயக்கும்) எம்பெருமானது சரித்திரம் என்று நினைந்து (அது பற்றியெழுந்த பேராசையுடையே னாய்), தென் செயந்திபுர மான்மியமாம் என - தமிழ்ச் செயந்திபுர மான்மியம் இதுவென்று, உலகில் இனிய தமிழேபோலத் தெரிதரச் செப்பினேன் - உலகத்தின் கண்ணே இனிய தமிழ்ப் பிரபந்தமே போலத் தோன்றப் பாடினேன் எ-று. (14)

**வெண்டிரைப்பாற் கடலிடத்துக் கருங் கடல்போற் றுயினெடுமால் வியப்போவாது**
**பண்டுசனற் குமரனுக்குப் பகற்காதை யக்காதைப் பண்பு வேத**
**முண்டுபடுத் தியசீர்த்தி வியாசமுனி சுகமுனிவற் குரைத்த காதை**
**யெண்டகைய சூதமுனி நைமிசாரணியர்தமக் கிசைத்த காதை.**

**இதன் பொருள்:** பண்டு வெண்டிரைப் பாற்கடலிடத்துக் கருங்கடல் போல் துயில் நெடுமால் வியப்பு ஓவாது சனற்குமரனுக்குப் பகர் காதை- (இங்ஙனம் யான் பாடுமாறு எடுத்துக்கொண்ட கதையானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளிலே வெண்மையாகிய திரைகளையுடைய பாற்கடலின்கட் கருங்கடல்போல உறங்குந் திருமால் அதிசயம் ஒழியாது சனற்குமார முனிக்குச் சொல்லிய கதையாம், வேதம் உண்டுபடுத்திய சீர்த்தி வியாசமுனி அக்காதைப் பண்பு சுகமுனிவற்கு உரைத்த காதை - வேதங்களை (ப் புதுக்கிப் பகுப்பு)ச் செய்த கீர்த்தியையுடைய வியாச முனி (சனற்குமார முனியிடத்துக் கிரமமாகத் தான் கேட்டுக்கொண்ட) அக்கதையின் இயல்பினாற் சுகமுனிவனுக்குச் சொன்ன கதை (யுமாம்), எண்டகைய சூதமுனிநைமிச ஆரணியர் தமக்கு இசைத்த காதை - எண்ணப்படுந் தகைமையையுடைய சூதமுனிவன் நைமிசம் என்னும் வனத்திலுள்ள முனிவர்களுக்கு (வியாசமுனிவன் சுகமுனிவனுக்குச் சொல்லியதென அனுவதித்து)ச் சொல்லிய கதையுமாம் எ-று. (15)

- பதிகம் முற்றிற்று -

**மயில்வாழ தகர்வாழி சேவல்வாழி மனுவனைய திரிசுவதந்திரத்தர் வாழி**
**குயில் வாழு மொழித்தெய்வ யானை வாழி குறவர் குலக் கொடிவாழி**
**கொடுஞ்சூர் மாய்த்த**
**வயில் வாழி செந்திபுரத் துற்றோர் வாழி யாறுமாமுகப் பெருமான்றன்**
**கருணை வாழி**
**பயில் வான்மை முகில்வாழி புராணங் கேட்போர் படிப்போர்கள்**
**கிளைகளெல்லாம் வாழிமாதோ.**

**இதன் பொருள்:** மெயில் வாழி - (தம்மை அன்பின்றி வன்பான் மாறு கொண்டு சார்ந்தாரையும் முன்னை நல்வினைச் சித்தியுள்ள வழி எம்பிரான் அடக்கி ஆட்கொண்டருளுவர் என்னுமுண்மைக்கு இலச்சினையாய், எம்பெருமானால் ஆளப்பட்டு, அடியார் வேண்டும் பொழுதெல்லாம் அவர்பால் எம்பெருமானை விரைந்து கொண்டுய்க் கும் ஊர்தியாகிய) மயில் வாழுக, தகர் வாழி - (அங்ஙனமே ஆளப்பட் டுத் தானும் ஊர்தியாகிய) ஆடு வாழுக, சேவல் வாழி - (அங்ஙனமே ஆளப்பட்டு எம்பெருமானது விசய நசின்னமாய், அவர் திருவருட் குறிப்பின் வழியே அல்லாரை நல்லாராக்கும் பொருட்டு அவர் தொல்லறி வழியக் கூவுந் திறத்ததாய) கோழி வாழுக, மனு அனைய திரிசு வதந்திரத்தர் வாழி - (எம்பெருமானுக்கு அடியார் செய்யும் வழிபாடுகட்குத் தாம் இன்றியமையாத சாதனமாய் நின்று தம்மையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடு தியானிப்பவரைக் காக்குமியல்புடைமையால்) மந்திரங்களை நிகர்த்த திரிசுவதந்திரர்கள் வாழுக, குயில் வாழும் மொழித் தெய்வயானை வாழி - (தம்மையன்போடு சேர்ந்தாரை எம்பிரான் நன்னிலைக்கண் உய்த்தருள்வரென்னு முண்மைக்கு இலச்சினையாய் எம்பெருமானாலே தமதபின்னமாகிய சத்தியின் அதிட்டானமாகக் கொள்ளப்பட்ட) குயிலிசைபோலும் மொழியையுடைய தெய்வயானை யம்மையார் வாழுக, குறவர் குலக் கொடி வாழி - (தம்மை அன்போடு சார்ந்தவர் குறைந்த குலத்தவராயினும், "காதலித்தேத்திய மெல்லினத் தார் பக்கன் மேவினர்" என ஆளுடைய பிள்ளையார் சொல்லியருளிய வாறே எம்பெருமான் அவரை நன்னிலைக்கண் உய்த்தருள்வர் என்னும் உண்மைக்கு இலச்சினையாய்த் தாமும் அங்ஙனங் கொள் ளப்பட்ட) குறவர் குலத்து வள்ளியம்மையார் வாழுக, கொடுஞ்சூர் மாய்த்த அயில் வாழி - (சூரபன்மனுக்கு வரங்கொடுத்த பொழுது, "தாவிலாத நஞ்சத்தி யொன்றேயலா லேவர் வெல்வர்" என்று கூறிய சிவபெருமானாலே தமது சத்தியென்று சுட்டப்பட்ட தானே சுப்பிர மணியபெருமானது திருக்கரத்துச் சத்தியுமாதலின், அவரிருவரும் குறியாலன்றிப் பொருண்மையால் வேறாகாமையை இனிது விளக்கி நிற்பதாய) கொடிய சூரனைச் சங்கரித்த வேலாயுதம் வாழுக, செந்திபுரத்து உற்றோர் வாழி - செயந்தி நகரின்கண்ணே (முன்னை நல்வினைவயத்தால் அவதாரஞ் செய்யும் பேறு பெற்றதால், இம்மை நல்வினை முயற்சியாற் சென்று வாழும் பேறு பெற்றாதல்) இருப்பவர்கள் வாழுக, ஆறுமுப் பெருமான்றன் கருணை வாழி - (சீவ கோடிகளையெல்லாம் ஆளும் பொருட்டு உருவுங் குறியுமுடையர் போன்று மேலே சுட்டிய சுகங்கட்கெல்லாஞ் சுவாமியாய்ச் செயந்தியிற் கோயில் கொண்டமர்கின்ற) சண்முகபெருமானுடைய (கைம்மாறு கருதாத அளவு கடந்த) திருவருள் வாழுக, வான் பயில் மைமுகில் வாழி - (அப்பெருமானது திருவருளினாலே உலகம் நிற்றற்கு இன்றியமையாத அமுதமான) மழையைப் பொழியுங் கரிய முகில்கள் வாழுக, புராணங் கேட்போர் படிப்போர்கள் கிளைகளெல்லாம் வாழி - (தன்னை அன்போடு ஓதல் கேட்டல் செய்வார்க்குச் சித்தசுத்தியையுஞ் சுத்த பத்தியையும் இட்ட சித்தி முத்திகளையும் உதவுவதாகிய செயந்தி) புராணத்தைக் கேட்பவரும் படிப்பவரும் (அவரைச் சார்ந்த) முழுக் கிளைகளும் வாழுக எ-று.

அன்றேல், தெய்வத் தன்மையினாலே எஞ்ஞான்றும் எஞ்சலின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று வாழ்தன்மாலையனவாய மயின் முதலியவற்றுக்கும் அம்மட்டோ முழுமுதற் கடவுளுக்கும் ஆசி கூற இந்நூலாசிரியர் பிரவேசிதது குற்றமாகாதா எனின், இயல்பாயமைந்த சுத்தியும் பேரின்பமுமுடைய கடவுளுக்கு அடியார் செய்யும் அபிடேகம் நைவேத்தியம் முதலியன போல இவ்வாழ்த்து ஆதாரமிகுதி பற்றிச் செய்யும் வழிபாடேயாதலாற் குற்றமாகாதென்க; இக்கருத்துப் பற்றியன்றே ஏனை நூலாசிரியருந் தத்தம் நூன்முடிவுகளில் இவ்வாறு வாழ்த்துக் கூறியதும்.

இனி வாழி என வந்தனவற்றையெல்லாம் அந்தர்ப்பாவி தணிச்சாக்கி நம்மை வாழ்விக்க எனப் பெருள் கூறலுமாம். அன்றியும் மயில் முதலியவற்றுக்கு மூன்றனுருபு விரித்து, வருவிக்கப்பட்ட நாம் என்னும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயரையே வாழியென்பதற்கு வ எழுவாயாகக் கேட்டலுமாம். (104)

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்ணாகம்

அமரர் சின்னத்தம்பி வெற்றிவேலு

தோற்றம் 07.01.1929 மறைவு 20.01.2002

அமரர் வெற்றிவேலு சரஸ்வதி

தோற்றம் 08.03.1927 மறைவு 01.12.2016

**தம்பதிகளின் ஞாபகார்த்தமாக**

**பிள்ளைகளின் அன்பளிப்பு**

ஸ்ரீ மாருதி,வழக்கம்பரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org